# 21.04.2026 செய்திகள்

## இந்தியா – தென் கொரியா இடையே ஒப்பந்தம்

» என்னென்ன ஒப்பந்தங்கள்?

- செமிகண்டக்டர் உற்பத்தியில் உலகத் தரம் வாய்ந்த தென் கொரியாவின் தொழில்நுட்பத்தை இந்தியாவுடன் பகிர்ந்து கொள்ளவும், இந்தியாவில் உற்பத்தியை அதிகரிக்கவும் ஒப்பந்தம்.
- தென் கொரியாவின் நவீன கப்பல் கட்டும் தொழில்நுட்பத்தை இந்தியக் கடலோரப் பகுதிகளில் பயன்படுத்தவும், புதிய கப்பல் கட்டும் தளங்களை உருவாக்கவும் முடிவு.
- மேற்காசியாவில் நிலவும் அசாதாரண சூழலைக் கருத்தில் வைத்து, எரிசக்தி வினியோகத் தொடரை உறுதிப்படுத்தவும், 'நாப்தா' எனப்படும், எளிதில் தீப்பற்றக்கூடிய மற்றும் ஆவியாகக்கூடிய திரவ ஹைட்ரோகார்பன் கலவை போன்ற முக்கிய எரிபொருட்களின் தடையற்ற வர்த்தகத்திற்கு முன்னுரிமை .
- நம் நாட்டின் மிகச்சிறந்த தகவல் தொழில்நுட்பத்துறையின் மனித வளத்தையும், தென் கொரியாவின் உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பையும் இணைத்து, 'டிஜிட்டல் பாலம்' அமைக்கத் திட்டம்.
- தென் கொரிய நிதி நிறுவனங்கள் நம் நாட்டில் முதலீடுகள் செய்ய ஏதுவாக புரிந்துணர்வு ஒப்பந்தம்
- அணுசக்தித் துறை மற்றும் தூய எரிசக்தி பிரிவில் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை வழங்க இரு நாடுகளும் முன்னுரிமை தர முடிவு.
- சர்வதேச வினியோக தொடரில் சீனாவின் ஆதிக்கத்தைக் குறைத்து, இந்தியா மற்றும் தென் கொரியாவை உள்ளடக்கிய ஒரு வலுவான வினியோக கட்டமைப்பை உருவாக்க திட்டம்.
- பசுமை ஹைட்ரஜன், எலக்ட்ரிக் வாகனங்கள், விண்வெளித் துறைகளில் தென் கொரியாவின் தொழில்நுட்ப உதவிகளை இந்தியாவுடன் பகிர்ந்து கொள்ள ஆர்வம் காட்டப்பட்டுள்ளது.

SURESH'